ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 22.05.2015

## நாணயக் கொள்கை மீளாய்வு – 2015 மே

2015 மேயில் மத்திய வங்கியின் கொள்கை வீதங்கள் குறைக்கப்பட்டமையினைக் கொள்வது எதிர்பார்க்கப்பபட்டவாறு சந்தை வட்டி வீதங்கள் கீழ்நோக்கிச் சீராக்கப்பட்டன. தொடர்ச்சியாகக் காணப்பட்ட தாழ்ந்த வட்டி வீத அமைப்பானது தனியார் துறையிலிருந்தான வங்கிக் கொடுகடனுக்கான கேள்விகூறுகளுக்கான கேள்வியைத் தூண்டியது. இதன்படி, 2015 மாச்சில் வர்த்தக வங்கிகளிலிருந்து தனியார் துறையினரால் பெறப்பட்ட கொடுகடன் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 13.9 சதவீதத்தினால் அதிகரித்தது. உண்மையான பெறுமதி நியதிகளில் இம்மாத காலப்பகுதியில் அதிகரிப்பு ரூ.41.4 மில்லியனாக அமைந்து வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட ஒன்றுசேர்ந்த அதிகரிப்பினை 2015இன் முதற் காலாண்டுப் பகுதியில் ரூ.86.9 பில்லியனுக்கு உயர்வடையச் செய்தது. தனியார் துறைக்கான வர்த்தக வங்கிகளின் கடன்கள் மற்றும் முற்பணங்களின் காலாண்டு ரீதியான அளவீட்டின்படி கொடுகடனில் ஏற்பட்ட உறுதியான விரிவாக்கத்திற்கு கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளுக்கான கொடுகடன் பாய்ச்சலே முக்கிய தூண்டுதலாக அமைந்தது. தொடர்ச்சியாக தாழ்ந்த சந்தை வட்டி வீதங்களை கவனத்திற் கொள்கையில், தனியார் துறையினருக்கான கொடுகடன் எதிர்வரும் காலங்களில் மேலும் அதிகரித்து பொருளாதாரத்தின் வளர்ச்சி உத்வேகத்திற்கு மேலும் உதவியளிக்கும் என எறிவு செய்யப்பட்டுள்ளது. தனியார் மற்றும் அரச துறை இரண்டிற்குமான அதிகரித்த கொடுகடன் பாய்ச்சல்களின் விளைவாக விரிந்த பணம் ($M_{2b}$) ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2015 மாச்சில் 12.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து நாணய விரிவாக்கத்திற்கான எதிர்பார்க்கப்பட்ட பாதையில் பயணித்தது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு, பணவீக்கம் 2015 ஏப்பிறலில் 0.1 சதவீதமாக விளங்கி முன்னைய மாதத்தில் இருந்ததைப் போன்றே மாற்றமின்றிக் காணப்பபட்டது. ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கம் 2015 பெப்புருவரியிலிருந்து 1 சதவீதத்திற்கும் குறைவாக விளங்கி உள்நாட்டு வலு விலைகள் கீழ்நோக்கித் திருத்தப்பட்டமையினையும்

தெரிந்தெடுக்கப்பட்ட நுகர்வுப்பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட குறைப்பினையும் பிரதிபலித்தது. 2015 ஏப்பிறலில் ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் முன்னைய மாதத்தின் 2.5 சதவீதத்திலிருந்து 2.1 சதவீதத்திற்கு மேலும் குறைவடைந்தது. அதேவேளை மையப் பணவீக்கம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் மாச்சின் 1.4 சதவீதத்திலிருந்து 2015 ஏப்பிறலில் 2.4 சதவீத்திற்கு அதிகரித்தமைக்கு நலப் பணிகள் மற்றும் ஆடைகள் போன்ற உணவல்லா விடயங்களில் பதிவு செய்யப்பட்ட விலை அதிகரிப்புக்களே முக்கிய காரணமாகும். முன்னோக்கிப் பார்க்கையில், மேம்பட்ட உள்நாட்டு நிரம்பல் நிலைமைகள் மற்றும் பண்ணாட்டுச் சந்தைகளில் முக்கிய பண்டங்களின் விலைகள் குறைவடைந்தமை என்பனவற்றின் காரணமாக இனிவரும் மாதங்களில் பணவீக்கம் குறைந்த மட்டங்களில் காணப்படும் என எறிவு செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டுத் துறையில், அண்மையில் இந்திய ஒதுக்கு வங்கியுடனான ஐ.அ.டொலர் 400 மில்லியனுக்காக மேற்கொள்ளப்பட்ட நாணய ஒன்றுக்கொன்று பரிமாற்றல் ஒப்பந்தம் நாட்டின் அலுவல்சார் ஒதுக்குகளைப் பலப்படுத்தியிருக்கிறது. எதிர்வரும் காலத்தில் எதிர்பார்க்கப்படும் மூலதன உட்பாய்ச்சல்கள் கிடைக்ககூடியதன்மை, சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் உட்பட பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களின் வடிவிலான உறுதியான கிரமமான உட்பாய்ச்சல் என்பன இவ்வாண்டுப் பகுதியில் சென்மதி நிலுவையினை மேம்படுத்தும். 2015இல் இதுவரை இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக ஏறத்தாள 2.0 சதவீதத்தினால் தேய்வடைந்திருக்கிறது.

இப்பின்னணியில் நாணயச் சபை தற்போதைய நாணயக் கொள்கை நிலை பொருத்தமானது என்ற கருத்தினைக் கொண்டிருக்கிறது. இதற்கமைய, 2015 மே 21ஆம் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 6.00 சதவீதத்திலும் 7.50 சதவீதத்திலும் பேணுவதெனத் தீர்மானித்தது.

| நாணயக் கொள்கைத் தீர்மானம்: | கொள்கை வீதங்கள் மாற்றமடையவில்லை. |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 6.00% |
| துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் | 7.50% |
| நியதி ஒதுக்கு விகிதம் | 6.00% |